**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions
} Case No. CC 89 of 2023

Depositions of PW -4 witness for ________ { Prosecution / Defence / Court

Name : தனலட்சுமி

Father's Name : க/பெ. கார்த்திக்குமார்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 29th **day of January** 2026.

**(1 ம், 2 ம் எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி பாகுபாச பிரிவு 355 ன் படி மனு தாக்கல் செய்துள்ளார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் தற்பொழுது அப்பநாயக்கன்பட்டியில் வசித்து பஞ்சாயத்து அலுவலகத்தில் கணினி அப்ரேட்டராக வேலை பார்த்து வருகிறேன். கடந்த 30.11.2022 ம் தேதியன்று நானும் எங்கள் குடும்பத்தினரும் மாமியாரின் தம்பிக்கு சாமி கும்பிடுவதற்காக கதிர்நாயக்கம்பாளையத்திற்குகு மாலை 6 மணிக்கு கிளம்பிவிட்டோம். என்னுடைய கொழுந்தனார் சசிக்குமார் மட்டும் வீட்டில் இருந்தார். அவர் மொபைல் ஷாப்பிற்கு 10.30 லிருநது 11 மணியளவில் செல்வார். என்னுடைய மாமனார் சுமார் 4 மணியளவில் எங்கள் வீட்டிற்கு கிளம்பி விட்டார். சுமார் 6 மணியளவில் என் மாமானார் என் மாமியாரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு வீட்டின் கதவு உடைந்திருப்பதாகவும், பீரோகள் உடைக்கப்பட்டிருப்பதாகவும் எங்கள் வீட்டில் இருந்த நகைகள் மற்றும் பணம் காணாமல் போயிவிட்டதாக தெரிவித்தார்.

2. எனவே நாங்கள் வீட்டிற்கு வந்து பார்த்தபோது எங்கள் அறையில் இருந்த பீரோ

உடைக்கப்பட்டு இருந்தது. என் அத்தையின் பீரோவில் இருந்த 2 பவுன் கொடி ,2 பவுன் செயின், 1 பவுன் செயின், ½ பவுனில் 4 மோதிரங்கள், 1-½ பவுனில் 3 ஜோடி கம்மல், ½ ல் தாலி குண்டுகள் மொத்தம்-8, என்னுடையது 3 பவுனில் ஆரம், 4 பவுனில் 1 ஆரம், 2 பவுனில் நெக்லஸ், 2-½ பவுன் பிரேசிலட், 1 பவுன் பட்டை செயின் மொத்தம் 22 பவுன் நகைகள் மற்றும் பணம் ரூ.1,60,000/-காணாமல் போயிருந்தது. பின்னர் டிசம்பர் 1 ம் தேதி காவல் நிலையம் சென்று என் மாமனார் புகார் அளித்தார். பின்னர் நீதிமன்றத்தில் மனு செய்து எங்களுடைய பணம் மற்றும் நகைகளை திரும்ப பெற்று கொண்டோம். புகைப்படத்தில் உள்ள நகைகள் தான் காணமால் போன நகைகள் ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வைமகசரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதாகும். 01.12.2022 ம் தேதியன்று காலை சுமார் 10.00 மணியளவில் எங்கள் வீட்டிற்கு வந்த போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும் என்னுடைய கணவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். பார்வைமகசர் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணைக்கு போதிய வாய்ப்பு அளிக்கப்பபட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.01.29 18:38:26 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**